# கீதாசார்யன்



# விதியின் வலிமை

ஸ்ரீராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும் என்று தசரத சக்ரவர்த்தி விரும்பினான். இதைக் கேட்ட மக்களும் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தார் ப்ரம்மரிஷி வஸிஷ்டர். ஆனால் ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்டு விழா நடந்ததா? இல்லை. ஏன் நடக்கவில்லை? விதி.

சத்தியசந்தன் தசரதனும், ப்ரம்மரிஷி வசிஷ்டரும் பொதுமக்களும் விரும்பிய பட்டாபிஷேகம் நடக்கவில்லை. கேவலம் ஒரு வேலைக்காரி மந்தரை நினைத்தாள் பட்டாபிஷேகத்தை நிறுத்திவிடவேண்டும் என்று—அது நடந்துவிட்டது. விதி.

சரி போகட்டும்! ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு, பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்று நினைத்தாள் கைகேயி. வேறு வழியில்லாமல் தசரதனும் இசைந்தான். அதாவது நடந்ததா? இல்லை. ஏன்? விதி.

முடிவில் நடந்தது என்ன? யாரும் எதிர்பாராத பாதுகா பட்டாபிஷேகம் நடந்தது. விதியின் வலிமைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

விதியை மதியால் வெல்லலாம் என்கிறார்கள். அப்படி வென்றாலும் அதுவும் விதியின் செயலே என்று சொல்லத் தடையென்ன?

# ஸ்ரீமத் பகவத்கீதை

## இரண்டாம் அத்யாயம்

நஹிப்ர பச்யாமி மமாப நுத்யாத்
யச்சோகமுச்சோஷண மிந்த்ரியாணும்
அவாப்ய பூமாவஸபத்நம் ருத்தம்
ராஜ்யம் ஸுராணுமபி சாதிபத்யம் (8)

எதிரிகளற்ற, செழிப்புள்ள அரசை அடைந்தாலும், தேவர்களுக்குத் தலைவனுக இருக்கும் தன்மையை அடைந்த போதிலும், என்னுடைய புலன்களை உலர்த்தும் இச் சோகத்தைப் போக்கும் வழி காண்கின்றேனல்லேன்.

ஸஞ்சய உவாச ஸஞ்சயன் சொல்கிருன்

ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம் குடாகேச: பரந்தப:
நயோத்ஸ்யாமீதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம் பபூவஹ (9)

எதிரிகளைத் தவிக்கச் செய்யும் அர்ஜுனன் இவ்வாறு, "நான் போர் புரியமாட்டேன்" என்று இருடிகேசனுன கோவிந்தனிடம் கூறிவிட்டு மௌனமானுன்.

தமுவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸந்நிவ பாரத
ஸேநயோருபயோர் மத்யே ஸீதமாநமிதம் வச: (10)

பரத குலத்துதித்த திருதராஷ்ட்ரனே! இரு சேனைகளுக்கிடையில் வருந்துகிற அர்ஜுனனைப் பார்த்து கண்ணன் சிரித்துக்கொண்டே பின்வரும் வார்த்தைகளைக் கூறினுன்.

# இமயமலைச் சாரலில் இனிய தமிழ் விழா!

ஆழ்வார்கள் அருளிய திவ்யப்பிரபந்தத்திற்காகவே ஏற்பட்டது திருவத்யயன உத்ஸவம். தமிழ்ப் பாசுரங்களின் பெருமையைப் பறை சாற்றும் இவ்வுத்ஸவம் தென்னாட்டு திவ்ய தேசங்களனைத்திலும் நடப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால் இவ்வுத்ஸவத்தை வடநாட்டு திவ்ய தேசங்களிலும் நடத்துவது என்பது விசேஷமல்லவா? எப்போதும் செயற்கரிய செயல்களையே செய்வதில் பெருமையுடைய ஸ்ரீமத் பரமஹம்ஸ திரிதண்டி ஸ்ரீமன் நாராயண ஜீயர் ஸ்வாமி பதரிகாச்ரமத்தில் ஒவ்வொரு வருடமும் இவ்வுத்ஸவத்தை நடத்தி வந்தார். அந்த ஜீயர் ஸ்வாமி பரமபதித்தவுடன் அவர் பட்டத்தை தற்போது அலங்கரிக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பால ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமி தொடர்ந்து அவ்வுத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

பதரிகாச்ரமத்தில் அமைந்துள்ள அஷ்டாக்ஷர க்ஷேத்ரத்தில் 18—6—80 முதல் 20—6—80 வரை மூன்று நாட்கள் திருவத்யயன உத்ஸவம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு பால ஜீயர் ஸ்வாமி பற்பல வேத வித்தகர்களையும், திவ்யப் பிரபந்த விற்பன்னர்களையும் அழைத்துக் கொண்டு 14—6—80 அன்று டில்லி ராம்மந்திருக்கு எழுந்தருளினார். அங்கு அவருக்கு பல M.P.க்களும் உயர் அதிகாரிகளும், பத்திரிகைத் துறையினரும் உற்சாகமான வரவேற்பளித்தனர். விருந்தாவன், ஹரித்துவார், ஹ்ருஷீகேசம் ஆகிய திவ்ய தேசங்களை மங்களா சாஸனம் செய்துவிட்டு 18—6—80 அன்று பதரிகாச்ரமத்தில் அத்யயன உத்ஸவம் தொடங்கப்பட்டு வேத, திவ்யப்பிரபந்த கோஷ்டிகளும் 20—6—80 மாலை ஆழ்வார்

திருவடி தொழுதலும் இரவு இயற்பா சாற்றுமுறையும் நடை பெற்றன. இவ்வுத்ஸவத்தை ஸேவிக்க அத்தேச மக்களும் உயர் அதிகாரிகளும் திரளாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒரிருவரே பதரிகாச்ரமம் செல்வது மிகப்பெரிய காரியமாக இருக்கும் நிலையில் (அடியேன் உள்பட) பற்பலரையும் அழைத்துக் கொண்டு சென்று ஒரு பெரிய உத்ஸவத்தை நடத்தியது ஜீயர் ஸ்வாமியின் அமாநுஷ்யமான சக்தியையே காட்டுகிறது. பெரிய ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமியின் பரிபூர்ண கடாக்ஷம் பாலஜீயர் ஸ்வாமிக்கு இருப்பதை இது நன்கு நிரூபிக்கிறது. பொலிக! பொலிக!! பொலிக!!!

T. A. பாஷ்யம்

போன் : 841151

# ஸ்ரீ வைஷ்ணவா பத்ரீ ஸ்பெஷல்

92, டி. பி. கோயில் தெரு சென்னை-5

29—8—80 முதல் 30 நாட்கள்

வடநாட்டு பிரயாணம்

வால்டேர், பூரி, கயா, காசி, அலகாபாத், அயோத்யா, நைமிசாரண்யம், அரித்வாரம், தேவபிரயாகை, பத்ரீ, குருக்ஷேத்ரம், டில்லி, மதுரா, கோகுலம், ஆக்ரா, புஷ்கரம், துவாரகைகள், பம்பாய், சென்னை.

இரு வேளை ஆகாரம், காபி, பத்ரீ ஸ்பெஷல் பஸ், ஊர்களைச் சுற்றி பார்க்க பஸ், வண்டி செலவு உள்பட 30 நாட்களுக்கு

2ம் வகுப்பு ரூ. 1575 முதல் வகுப்பு ரூ 3006

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜாதக பரிவர்த்தனை செய்யப்படும். ஜாதகத்தை கொடுத்து உதவுமாறு ப்ரார்த்திக்கிறேன்.

# திருவேளுக்கை

**தூணில் தோன்றிய எந்தை !** ஸ்ரீமந் நாராயணன் மேற் கொண்ட அவதாரங்கள் பல. ஆயினும் பத்து அவதாரங் களையே முக்கிய அவதாரங்களாகக் கொண்டு 'தசாவதாரம்' என்று பெரியோர்கள் கூறி வருகிறார்கள். அவற்றுள் நரஸிம்மாவதாரத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. இரணியனைக் கொல்வதற்காகப் பகவான் இந்த அவதாரத்தை மேற்கொண் டான் என்பர் பலர்; இல்லை இல்லை; தம்மிடம் அளவிலா

**ஸ்தலசயனத் துறைவார்**

அன்பு கொண்ட பிரகலாதனைக் காப்பதற்காகவே இவ்வாறு அவதரித்தான் என்றும் சிலர் கூறுவர். இரண்டும் ஏற்புடைய னவே! ஆனால், மூன்றாவதாகவும் ஒருண்மை புலனாகிறது! எல்லாப் பொருள்களையும் தனக்குச் சரீரமாகவும், எல்லாப் பொருள்களுக்கும் தானே ஆதாரமாகவும் இருப்பவன் ஸ்ரீமந் நாராயணன். இவ்வுண்மையை இரணியன் அறிந்திருந்தும், ஏற்க மறுத்து எதிர்த்து வந்தான். பகவானை விட தன்னை உயர்ந்தவனாக எண்ணி வந்தான். உலகிற்கு நன்மையளிக் கும் பகவானின் திருநாமங்களையே சொல்லக்கூடாது என்றான். இத்தனை வகையாகத் தம்மிடம் அபசாரப் பட்டாலும் எம்பெருமான் சிறிதும் சீற்றம் கொள்ளவில்லை. எல்லாப் பொருள்களிலும் தானிருப்பதை இவனுக்கு உணர்த்த வேண் டும் என்றே விரும்பினான்!

பிரகலாதன் சிறந்த பாகவதோத்தமன், இரணியனுக்கு மகனாக இருந்தும் எம்பெருமானிடம் பேரன்பு கொண்டிருந் தான். 'அஷ்டாக்ஷர மஹாமந்த்ரமே' தம்மை ரக்ஷிக்கும்

என்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். இரணி யன் பிரகலாதனுக்குப் பல துன்பங்களைச் செய்தான். இவற் றைப் பிரகலாதாழ்வான் பொறுத்துக் கொண்டான். ஆனால், பாகவதோத்தமனிடம் இரணியன் செய்யும் அபசாரங்களை எம் பெருமானால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை இதற்குரிய தண்டனை இரணியனை அழிப்பதே என்று முடிவு செய்தான். இக் காரணம் பற்றியே இரணியன் காட்டிய தூணிலிருந்து வெளிப்பட்டான்; 'கரந்தெங்கும் பரந்துளன்' என்ற உண் மையை இரணியனுக்கு உணர்த்தினான். அவனைப் போன்ற மூர்க்கர்களுக்கும் புலப்படுத்தினான்; உலகினுக்கே அறிவித் தான். பாகவதாபசாரத்தின் பயனை இரணியனுக்கு அளிக் கும் வகையில் அவனைக் கொன்றான். 'தான் எங்கும் நிறைந்த பரம் பொருள்' என்பதை உணர்த்தவே பகவான் நரசிங்க மாய்த் தோன்றினான் என்று கூறலாமன்றோ!

**சிங்கப்பிரான் உவந்த மூவிடங்கள் :** மிருகங்களில் நான் மிருகேந்திரன் (சிங்கம்) என்றான் கீதாசார்யன். சிங்கம் காட்டில் வாழும், மலையுச்சியிலும், மலைக்குகைகளிலும் உகந்து வாழும். சோளங்கிபுரம் முதலான இடங்களில் நரஸிம்மன் மலையுச்சியில் அமர்ந்திருப்பதை ஸேவிக்கலாம். அத்திகிரி (தேவப் பெருமாள் ஸன்னிதி) சிங்கப் பெருமாள் கோயில் முதலிய இடங்களில் நரஸிம்மர் மலைக் குகைகளில் எழுந்தருளி இருக்கிறார். ஸ்ரீரங்கத்திற்கு அருகில் (வனத்தில்) எழுந்தருளி இருக்கும் அழகிய சிங்கரைக் காட்டழகிய சிங்கர் என்றே இப்போதும் கூறுகின்றனர். திருவல்லிக்கேணியைப் பிருந்தாரணியம் என்று கூறுவர். ஆதலால், இங்கும் அரணி யத்தில் (வனத்தில்) நரஸிம்மர் எழுந்தருளி இருப்பதாகவே கொள்ளவேண்டும். திருவேளுக்கை என்ற இந்த திவ்யதேச மும் வேகவதி நதிக்கரையிலுள்ள 'தும்பைவனம்' என்கிற காட்டில் இருப்பதாகவே கருத வேண்டும்.

வேள் இருக்கை என்பதே வேளுக்கை என்றாயிற்று. நரஸிம்மன் (மிகவும் விருப்பத்தோடு எழுந்தருளி இருக்கும்.

இடம்) என்று பொருள். (சிங்கவேள் இருக்கும் இடம்) என்றும் பொருள் கொள்ளலாம். திருமங்கையாழ்வார் அஹோபிலத்தைச் 'சிங்கவேள் குன்றம்' என்றார். நமது உடலே நரஸிம்ஹனின் ஸந்நிதி தான்! 'சிங்கப்பிரான் அவன் எம்மான் சேரும் திருக்கோயில் கண்டீர்!' என்றார் பெரியாழ்வார். 'ஆளரி' என்ற சொல் நரஸிம்மனையே குறிக்கும். நரஸிம்மம் என்ற திருநாமத்தின் தமிழாக்கமே ஆளரி என்பது தான்.

பயக்ருத் பயநாசந: இவ்விரு திருநாமங்களும் எம்பெருமானையே குறிக்கின்றன. அடியார்களிடம் அன்பு கொண்ட பரமன், அவர்களின் விரோதிகளுக்குப் பயத்தை அளிக்கிறான். அவர்களால் பக்தர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தை அழிக்கிறான். நாம் பயம் நீங்கி வாழ வேண்டுமாயின் நரஸிம்ஹனின் திருவருளைப் பெற வேண்டும். இராவணனையும் அவனைச் சேர்ந்த அரக்கர்களையும் அழித்து, அவர்களால் மகரிஷிகளுக்கு ஏற்பட்டிருந்த பயத்தை நீக்கியது ராகவஸிம்ஹம்; இரணியனை அழித்துப் பிரஹ்லாதனின் பயத்தை நீக்கியது நரஸிம்மம். வெள்ளத்தினால் அபாயத்தை அடைந்த காலத்திலும், அல்லது தண்ணீரைக் கடக்கும் காலத்திலும் வராஹப் பெருமானை நினைக்க வேண்டும்; அவனையே சரணடைய வேண்டும். பூமியில் நடந்தோ வண்டிகளிலோ பிரயாணம் செய்யும் போது வாமனவதார எம்பெருமானை நினைக்க வேண்டும்; சரணடைய வேண்டும். பயமளிக்கும் பெருங்காட்டில் பயணம் செய்யும் போது, மிருகங்களாலும், துர்தேவதைகளாலும், பிசாச ராக்ஷஸர்களாலும் துன்பம் ஏற்படாமல் இருக்க நரஸிம்மனையே நினைக்க வேண்டும். இவர்களை அவ்வப்போது நினைத்தாலும் கேசவனை மறந்துவிடக் கூடாது: அவனே நம்மை எங்கும் ரக்ஷிக்கிறான். அவனை இடை விடாமல் நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இதோ! பெரியோர்கள் அடிக்கடி சொல்லும் சுலோகம் ஒன்றைக் காணீர்!

**ஜலே ரக்ஷது வாராஹ: ஸ்தலே ரக்ஷது வாமந: |**
**அடவ்யாம் நாரஸிம்ஹஸ்ச ஸர்வத: பாதுகேசவ: ||**

பயநாசனன்; பயாபஹாரி என்ற திருநாமங்களைத் தாங்கிய நரஸிம்மனின் அருளில்லாமல் பயமின்றி வாழ இயலாது.

அருள் பெறுவார் அடியார்! கசடறக் கல்வி கற்க வேண்டும். அக் கல்வியறிவின் முதிர்ச்சி வணக்கத்தை விநயத்தைத் தர வேண்டும். ஆதலால், கல்வியினால் பெறுவது வினயம்; செல்வத்தினால் பிறர்க்கு உதவும் உளப்பாங்கைப் பெற வேண்டும். ஆனால், இவை எல்லாம் அஹங்காரத்தையே வளர்க்கின்றன. பகவானின் அருளாலும், முன் செய்த நல்வினையாலும் எல்லா வகைகளிலும் சிறந்திருப்பவனிடம் சென்று, 'நீ யாருக்கு உரியவன்' என்று கேட்டால், நான் பகவானுக்கு உரியவன்' என்று அவன் சொல்லத் துணிவது இல்லை; 'நான் எனக்கு உரியவன்' என்கிறான், 'தான் தனக்குரியன்' என்று நினைத்தவன் இரணியன். தனக்கு மேம்பட்டவன் இல்லை என்றே முடிவு செய்தான்; முடிந்து போனான்; ஆளழகிய சிங்கரே! அவனுடைய குமாரன் பிரகலாதன்! திருமந்திரத்தையே ரக்ஷகமாகக் கொண்டவன்; திருமந்திரார்த்தத்தில் ஊறியவன்! அதனால் அவன் தன்னை சேஷப் பொருளாக எண்ணினான். 'உனக்கே உரியன்' என்ற நிலையில் இருந்தான். உன் அருளால் நல் வாழ்வு பெற்று இன்றும் புகழப்படுகிறான்! உன் திருவடிகளில் அடிமைப் படாதவர்க்கு ஆவாரார் துணை!

'தான் தனக்கு உரியவன்' என்று நினைப்பவன் இரணியன் பட்டது படுவான்! 'அடியேன் தேவரீருக்கு உரியவன்' என்று நினைப்பவன் உய்ந்து போவான். ஆதலால் அழகிய சிங்கருக்கு அடியார்களாக இருக்க முற்படுங்கள் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

**தனக்குரியனாய் அமைந்த தானவர்கோன் கெட்டான்**
**உனக்குரியனாய மைந்தன் உய்ந்தான்—நினைக்குங்கால்**
**வேளுக்கை ஆளரியே! வேறுதவியுண்டோ! உன்**
**தாளுக்கு ஆளாகாதவர்க்கு.**

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி (77)

# திருமங்கை நாயகி

தாயும் பெண்ணும் உள்ளேயே யிருந்தார்கள். வேட்டையாடிக் களைத்து வந்த அத்தலைவன் அந்த வீட்டிற்கு வந்தான். நெடுந்தூரம் ஓடியலைந்த களைப்பால் அவனுக்குப் பெருந்தாகம் ஏற்பட்டது. வாசலிலே நின்று உள்ளேயிருந்தவர்களைக் கூவி அழைத்தான். தண்ணீர்—தண்ணீர் என்று கேட்டான். வீட்டு வேலையில் மூழ்கியிருந்த அத்தாய், மகளைக் கூப்பிட்டு வந்து நிற்கும் வழிப்போக்கனுக்குத் தண்ணீர் வார்த்து வா என்றாள். அப் பெண்ணும் தன் ஆடையைச் சரி செய்து கொண்டு பொற் குவளையில் தண்ணீர் எடுத்துச் சென்றாள். அப்பெண்ணை அருகே வா என்று அழைத்த அவன், சிறிது

---

பேராசிரியர். K. A. மணவாளன் M.A.B.O.L.

---

தண்ணீர் குடிப்பான் போலே குடித்துவிட்டுத் திடீரென்று அவளுடைய வளையல்களணிந்த கையினைப் பற்றிக் கொண்டான். மெதுவாக அவள் கையை விடுவித்துக் கொண்டே அம்மா என்று உரக்கக் கூவி விட்டாள். அம்மாவும் பெண்ணின் பெருங்குரல்கேட்டு என்ன நடந்தது என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

அப்பொழுது அக்கள்வன் அவளை வஞ்சகமாகப் பார்த்தான். அவள் உள்ளம் ஏனோ தடுமாற்றம் கொண்டது. உடனே அவள் தாயிடம் கூறினாள். அம்மா "இவர் தண்ணீர் குடிக்கும் போது விக்கல் ஏற்பட்டு வருந்தினார்; அதனால் யான் அஞ்சி உன்னை அழைத்தேன்" என்று ஒரு பொய்யைச் சொன்னாள். தாயும் தன் செல்வ மகளை அணைத்து அஞ்சேல் என்று ஆறுதல் கூறினாள். ஆனால் அக்கள்வனோ அப்பெண்ணைக் கடைக் கண்ணால் வஞ்சகமாகப் பார்த்துவிட்டுச் சென்றான்.

சென்ற பின்பும் அக்காட்சி அவள் நெஞ்சை விட்டகலவில்லை. அவனை அடைய வேண்டும்—அணைய வேண்டும் என்ற எண்ணம் அத்தலைவிக்கு ஏற்பட்டு விட்டது. இப்படியொரு காட்சி கலித்தொகை என்ற பழந்தமிழிலக்கியத்தில் காட்டப்பட்டுள்ளது. தமிழ் நன்னூல் துறைகள் ஐந்துக்கும் இலக்கியமான பரகாலன் பைந்தமிழிலும் இது போன்ற பல காட்சிகளை நாம் காணலாம்.

தெண்ணீர் வயல் தொண்டை நாட்டில் பல நகரங்கள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தது காஞ்சி மாநகரம். அங்கேதான் அத்தலைவன் வசித்து வந்தான். அவன் வீரர்களுக்கெல்லாம் வீரன் அவனுடைய மிடுக்கும் செருக்கும் அப்பப்ப! சொல்லி முடியாது. நற்றமிழைப் பாடும் நாவீறு படைத்தவர்களெல்லாம் வந்து வணங்கும் ஏற்றம் பெற்றவன். அவன் வரலாறு படைத்தவன். பலவாய ஆயுதங்களைக் கைகளிலே ஏந்தியவன் வில்லும் அம்பும் அவன் கைகளில் துலங்கும். சங்கு சக்கரங்கள் பிரகாசிக்கும். பெரிய கதையும் சிறிய உடைவாளும் உண்டு. தற்காப்புக்குக் கேடயமும் வைத்திருந்தான்.

ஆணழகனான அவன் நிறமே தனியழகு. நீண்ட கரிய மேகத்தின் நிறம் போன்றவன் மேலும் அவன் கல்லாத கலைகளே இல்லை. பல கலைகளையும் பயின்றவன். வேதங்களை நன்கு ஓதியவன். நீதி நூல்களை நன்கு அறிந்தவன். இவ்வளவையும் படித்ததோடு நிலலாமல் தேவர்களுக்கும் மற்ற மனிசர்க்கும் தன் நீர்மைக் குணத்தால் அருளியவன். அவனுடைய மலை போன்ற தோள்களும் மார்பில் விளங்கும் மங்கையும், மாமணியும் எல்லோரையும் வசிகரிக்கும் கடலைப்போன்ற கம்பீரமான அவனைக் காணாத கண்கள் கண்களேயல்ல.

அப்படிப் பட்டவன் அன்றொரு நாள் அவளைக் கண்டான். அவளுடைய வேல் போன்ற கண்களும் வளைந்த இடுப்பும் அவனுக்கு வேதனையை விளைவித்தன. அப்பொழுதே அவளைத்

தன் மனச்சிறையில் வைத்து விட்டான். அவள் மெலியுமாறு அவனுடைய வளையல்களையும் பெண்மையையும் கவர்ந்து சென்று விட்டான். அவளும் அவனைக் கண்டாள். அவன் கண்ஒளியிலே — திருமேனி நிறத்திலே தன்னை இழந்திருந்தாள். திருத்துழாய் அணிந்த மார்பையும் சந்தனம் பூசிய மேனியையும், தாமரை மலர் போன்ற கண்களையும் அழகான அகன்ற மார்பையும் நீண்ட பெரிய தோள்களையும் கொவ்வைக் கனி போன்ற அவன் வாயையும் நினைந்து நினைந்து ஏங்கியிருந்தாள். கரு நெய்தல் பூவைப் போன்றும் கடலைப் போன்றும் காட்சியளிக்கும் அத்தலைவனை அவள் எவ்வாறு மறப்பாள்.

அப்படி அவனையே நினைந்து நைந்திருக்கும் அத்தலைவி ஒருநாள் தனியாகத் தன் வீட்டிலேயிருந்தாள். அப்பொழுது அத்தலைவன் அவளுக்குத் தெரியாமல் அங்கு வந்தான். வாசலிலே நின்று சுற்றும் முற்றும் பார்த்தான். வீட்டில் யாரும் இல்லை. தனியாக அழகே வடிவாக அங்கு நிற்கும் தன் உள்ளம் கவர் காதலியைக் கண்டான்.

கல்வியிலும் வீரத்திலும் சிறந்த ஆணழகனான அத்தலைவனை எப்பொழுதும் நினைத்துக் கண்ணை மூடிக் கொண்டிருந்ததால் அவள் அவன் எதிரே வந்து நிற்பதையும் உணரவில்லை, அவனை நினைந்து கண்ணீர் மல்க, கைவளையல்கள் கழல நிற்கும் அப்பெண் சிறிது கண்ணைத் திறந்தாள். ஆம்! அந்த அழகே வடிவான திருவுருவம்; அதே கண்கள்; அதே பார்வை; எல்லாவற்றையும் கண்டு விட்டாள். உடலெல்லாம் வியர்வைத் துளிகள் துளிக்க உஷ்ணத்தால் பெருமூச்சு விட்டாள். வீட்டில் அன்னையும் இல்லையே என்ற பெருங்கவலை. அவனோ மேலும் நெருங்கி வருகிறான். ஐயோ! எனக்குப் பயமாக இருக்கிறதே! இவர் யாரோ தெரியவில்லையே! இவர் பார்க்கிற பார்வை என்னை என்னவெல்லாமோ செய்கிறதே! என்று வாய்விட்டு அரற்றி விட்டாள். அப்போது அத்தலைவன்,

பெண்ணே அஞ்சாதே உன்னை நான் அப்படி உற்றுப் பார்ப்பதற்கு ஒரு காரணம் உண்டு. உன்னோடு மிகவும் நெருங்கி நின்று பார்ப்பதற்கும் காரணம் உண்டு என்றான். என்ன காரணம் என்று கேட்பது போல் அவள் விழித்தான். அப்போது அத்தலைவன் சொன்னான்.

நான் மேலும் கீழுமாகப் பலமுறை பார்க்கிறேன். மேலே உன்னுடைய உருவம் முழுவதும் எனக்குத் தெரிகிறது. உன்னுடைய தாமரை போன்ற முகத்தையும், மான் விழியையும் கொடி மூக்கையும், கொவ்வைச் செவ்வாயையும் மட்டும் யான் காணவில்லை. விம்மிப் புடைத்தெழுந்த மார்பகங்களையும் தோள்களையும் காண்கிறேன். அதுபோலவே உன்னுடைய பஞ்சு போன்ற மென்மையான பாதகமலங்களையும், முழந்தாள்களையும், தொடைகளையும் காண்கிறேன். ஆனால் உன்னுடைய ஒரே அவயத்தை மட்டும் என்னால் காண முடியவில்லை. ஆம்! அந்த இடை எங்கே இருக்கிறது? மேலும் கீழும் அவயவங்களிருப்பதனால் அந்த இடையும், இடையே இருந்துதானே யாக வேண்டும் என்று அதை என் கண்கள் தேடுகின்றன. ஆதலினால்தான் அருகே நெருங்க நின்று அதைக் காண்கிறேன். என்னை நீ யாரென்று கேட்கிறாய். உண்மையாகவே கேட்கிறாயா? நான் யாரென்று வாய் திறந்து சொல்ல வேண்டுமா? நீ கேட்பதால் சொல்கிறேன். அஞ்சாதே! அருகில் வா. நான் தான் அட்டபுயகரத்தான். எட்டுக் கைகளோடு வந்திருக்கிறேன். ஏன் தெரியுமா? மேல் பாரம் தாங்காமல் உன் சிற்றிடை எந்தப் பக்கமாவது ஒசிந்து—தளர்ந்து விழ்ந்தால் அந்தப் பக்கத்திலுள்ள கைகளால் அப்படியே உன்னை அள்ளி அணைக்கவே இத்தனைக் கைகளோடு வந்திருக்கிறேன் என்றான். இப்படி அத்தலைவனைக் காமுற்று அஞ்சித் தனியே வீட்டிலிருந்த பெண் வேறு யாருமல்ல திருமங்கை நாயகிதான். அவளை அள்ளி அணைக்க வந்த தலைவனும் வேறு யாருமல்ல காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டிருக்-

னும் அர்ச்சாவதார எம்பெருமான் அட்டபுயகரத்தான் தான். இக்கருத்தினைக் காட்டும் திருமங்கையாழ்வார் பாடலில் சான்றாக ஒன்றே ஒன்று.

தஞ்சமிவர்க்கென் வலையும் நில்லா
நெஞ்சமும் தம்மதே சிந்தித் தேற்கு
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி
வாய்திறந்தொன்று பணித்ததுண்டு
நஞ்சமுடைத்திவர் நோக்கும் நோக்கம்
நானிவர்தம்மை யறிய மாட்டேன்
அஞ்சுவன் மற்றிவரார் கொலென்ன
அட்டபுயகரத் தேனென்றாரே !


# OCEANLINK

Shipchandlers-shipservice engineers & Exporters

★

254, Thambuchetty Street, 1st Floor,
MADRAS-600 001.
Phone : 31348, 844413

# எம்பெருமானும் யானையும்

எம்பெருமானை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் யானை யாகப்பேசி யநுபவிக்கிறார்கள். "தென்னானாய் வடவானாய் குடபாலானாய் குணபால மதயானாய்" என்றும், "என்னானை யென்னப்ப னெம்பெருமான்" என்றும், "சோலை மழகளிறே" என்றும் பலப்பல அருளிச்செயல்களுள்ளன. "குஞ்சரம் வா அத்ரி குஞ்ஜே" என்றார் பட்டரும்.

யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்ய முண்டு;—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும் போதெல்லாம் அபூர்வ வஸ்து போலவேயிருந்து பரமாநந்தம் பயக்கும்; எம்பெருமானும் "எப்பொழுதும் நாள் திங்களாண்

**P.B. அண்ணங்கராசாரியர்**

டூழியூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்னும்படியிருப்பன். "பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில்" என்றவிடமும் காண்க.

2. ஆனையின்மீது ஏறவேண்டியவன் ஆனையின் காலைப் பற்றியே ஏறவேண்டும். எம்பெருமானிடஞ் சென்று சேர வேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேர வேண்டும். "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே"

3. ஆனை தன்னைக்கட்டத் தானே கயிறு எடுத்துக் கொடுக்கும்; "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன்.

4. யானையை நீராட்டினாலும் அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடே சேரும்: எம்பெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரமபவித்திரனாயிருக்கச் செய்தேயும் "பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமுடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யத்தாலே.

5 யானையைப் பிடிக்கவேண்டில் பெண்யானையைக் கொண்டே பிடிக்கவேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்பட்டான்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன்பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப் பாகனுக்கே தெரியும்; பேரருளாளப் பெருமானோடே பேசுமவரிறே நம்பிகள். "ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே."

8. யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் யாவும் பாகனிட்ட வழக்காயிருக்கும்; எம்பெருமானும் "கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா—உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்" என்றும், "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு ஸர்வாத்மநா விதேயனிறே.

9. யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறுயிரமெறும்புகளுக்கு உணவாகும்; எம்பெருமானமுது செய்து சேஷித்த ப்ரஸாதத்தாலே பலகோடி பக்த வர்க்கங்கள் உஜ்ஜீவிக்கக் காண்கிறோம்.

10 யானைக்குக் கை நீளம்; எம்பெருமானும் *அலம் புரிந்த நெடுந்தடக்கையனிறே. ''நீண்ட அந்தக் கருமுகிலை யெம்மான்றன்னை.'' என்றதுங் காண்க.

11. யானை இறந்தபின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் ப்ரஸாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிஹாஸபுராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

12. யானைக்கு ஒரு கையே உளது; எம்பெருமானுக்கும் கொடுக்குங் கையொழியக் கொள்ளுங் கை இல்லையிறே

13. பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கும், தன்னை நிர்வஹிக்கின்ற வித்வான்களுக்கும் ஜீவனோஜ் ஜீவந ப்ரதன். 'எனக்கே தன்னைதந்த கற்பகம்''.

இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களுங் கண்டு கொள்க.

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

# விசிட்டரின் விபரீதப் போக்கு

அன்புள்ள விசிட்டர் பத்ரிகை ஆசிரியர் அவர்களுக்கு,

விசிட்டர் பத்ரிகை ஆரம்பித்தது முதல் ஆர்வமுடன் படித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன். அரசியலிலாகட்டும், மற்ற துறைகளிலாகட்டும் எந்தவொரு கட்சியையும் சாராமல் நடுநிலைமை வகிக்கும் தனிப்பெருமை விசிட்டர் ஒன்றுக்கே இருந்தது. அந்த நடுநிலைமையிலிருந்து சற்று பிறழ்ந்து விட்டதாகத் தோன்றுகிறது.

15-6-80 விசிட்டர் இதழில் இளங்கோவன் அவர்கள் எழுதியுள்ள "சிதம்பரம் கோயிலில் என்ன தகராறு?" என்ற கட்டுரை அந்த விபரீதத்திற்கு வித்திட்டுவிட்டது. சிதம்பரம் கோயிலில் வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையேயுள்ள தகராறுபற்றி விசாரித்து இருசாராருடைய கருத்துக்களையும் அப்படியே பிரசுரித்திருக்கிறீர்கள். இது நடுநிலைமைப் பத்திரிகை கடைப்பிடிக்கவேண்டிய சரியானமுறை. ஆனால் அக்கருத்துக்களுக்குப் பின்னால் கட்டுரை ஆசிரியர் இளங்கோவன் அவர்கள் தமது கருத்துக்களாக எழுதியிருப்பவை அவரது நடுநிலைமையில்லாத்தன்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன. அவர் பல பல விஷயங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தமக்குத் தோன்றியபடியெல்லாம் எழுதியிருக்கிறார். நான் ஒரு வைணவ சமயப் பத்ரிகையாகிய ஸ்ரீதாசார்யன் எனும் பத்ரிகையின் ஆசிரியன் என்ற முறையில் இளங்கோவனது கருத்துக்களில் உள்ள தவறுகளை மட்டும் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தேவாரம் பாடிய மூவர் கோவிந்தராஜரைப் பாடாமல் நடராஜரை மட்டுமே பாடியிருப்பதால் அவர்கள் காலத்தில் கோவிந்தராஜர் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்க முடியாது என்கிறார் இளங்கோவன். அவரே எடுத்துக் காட்டும்

திருமங்கை ஆழ்வாரோ குலசேகர ஆழ்வாரோ கோவிந்தராஜரைப் பாடியிருக்கிறார்களே தவிர, நடராஜரைப் பற்றிக் குறிப்பிடவில்லையே! எனவே அவர்கள் காலத்தில் நடராஜர் பிரதிஷ்டையே ஆகவில்லை என்று கூறலாமல்லவா?

மேலும் திருமங்கையாழ்வாரின் தூண்டுதலின் பேரினால் நந்திவர்ம பல்லவன் கோவிந்தராஜனை பிரதிஷ்டை செய்திருக்க வேண்டும் என்கிறார் இளங்கோவன். ஆனால் திருமங்கையாழ்வாரின் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு முற்பட்டவரான குலசேகராழ்வார் சித்திர கூடத்தைப் பாடியிருப்பதையும் எடுத்துக் காட்டும் இவர், குலசேகராழ்வார் காலத்திலேயே கோவிந்தராஜர் பிரதிஷ்டையாயிருந்ததை ஒப்புக் கொள்ள வேண்டுமல்லவா?

குலசேகராழ்வார் பாடல் முழுவதையும் எடுத்துக் கொள்ளாமல் கடைசி வரியை மட்டும் எடுத்துக் கொண்டு கோவிந்தராஜர் உட்கார்ந்த நிலையில்தான் இருந்திருக்க வேண்டும் என்கிறார். இது தவறு (வைகுந்தத்தில்) அணிமணியாசனத்திருந்த அம்மான்தானே இல்லைத்திருச்சித்திரகூடம் தன்னுள் (எழுந்தருளியிருக்கிறான்) என்பதுதான் சரியான பொருள். இப்பாட்டிற்கு அறிஞர்களின் விளக்கவுரையை எடுத்துப் பார்த்து உண்மையை உணரலாம். அதுபோல, அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த என்பதற்கு தில்லை மூவாயிரம் அந்தணர்களும் போற்றும்படியான என்றுதான் பொருளே தவிர தீட்சிதர்களே ஆராதித்த என்று பொருளல்ல. அக்காலத்தில் மூவாயிரம் அந்தணர்களும் இப்போதுபோல் காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் கோவிந்தராஜரிடம் பக்தி கொண்டிருந்தார்கள் என்பது குலசேகராழ்வார் பாட்டினால் தெளிவாகிறது. தீட்சிதர்கள் 2999 பேர்கள்தான் என்றும் தில்லை நடராஜரையும் சேர்த்துத்தான் மூவாயிரவர் என்றும் தீட்சிதர்களே கூறுகிறார்கள்.

திருமங்கை ஆழ்வார் தமது பெரிய திருமொழியில் "கவை நா அரவினணைப் பள்ளியின்மேல் திருமகள் திருமங்கையோடாடு தில்லைத் திருச்சித்திரகூடம்" (3-2-4) என்று பாடியிருப்பது கொண்டு அவர் காலத்திலேயே பெருமாள் ஆதிசேஷன் மீது சயனத்திருக்கோலத்தில்தான் இருந்தார் என்பதை நன்கு உணரலாம்.

குலோத்துங்க சோழன் கோவிந்தராஜரைக் கடலில் எறிந்ததற்குக் காரணம் வைணவர்களுடைய விஷமம் தான் என்கிறார் இளங்கோவன். வைணவர்கள் விஷமம் செய்த தாகவே வைத்துக் கொண்டாலும், அதைத் நீக்க அரசன் முயலாது, பெருமாளையே கடலில் எறிந்தான் என்றால் அந்தச் செயலை எந்த வார்த்தைகளால் கூறுவது. விஷமம் என்ற சொல்லும் போதாதே! இப்படிப்பட்ட அரசனை வைணவ நூல்கள் இழிவாகக் கூறுவதில் தவறு என்ன?

குலோத்துங்கன் சைவனாக இருந்தபோதிலும் பிறசமயக் கோயில்களையும் கட்டி, அவைகளுக்கு நிபந்தங்களும் அளித் திருக்கிறான் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவன் முதலில் மக்கள் ஆதரவைப் பெற எல்லா மதங்களிடத்தும் சமரச நோக்கு உடையவனாக இருந்திருக்கிறான். பிற்காலத் தில் ஒரு சில காரணங்களால், குறிப்பாக ஸ்ரீராமாநுஜருடைய புகழைக்கண்டு அசூயை கொண்டு தீவிரச் சைவனாக மாறி யிருக்க வேண்டும். ஸ்ரீராமாநுஜர் இளம் வயதிலேயே துறவி யாகி ஆயிரக்கணக்கான சீடர்களுடன் பாரதம் முழுவதும் விஜயம் செய்து வைணவத்தைப் பரப்பியது கண்டும், யக்ஞ மூர்த்தி, யாதவப்பிரகாசன் போன்ற அத்வைதிகளை வைண வர்களாக்கியது கண்டும் பொறாமையுற்றிருக்கிறான். திருமலை யில் கோயில் கொண்டுள்ள பெருமான் சிவனே என்றும் முருகனே என்றும் சில சைவர்கள் கிளர்ச்சி செய்த போது ஸ்ரீரங்கத்திலிருந்து ராமாநுஜர் வட வேங்கடம் சென்று அப் பெருமான் திருமாலே என்ற உண்மையை நிலை நாட்டியது

கண்டு சீற்ற முற்றிருக்கிறான். ராமாநுஜர் வைணவத்தைக் காக்கத் தலைப்பட்ட போதெல்லாம் தன் சைவ மதத்தைத் தாக்கத் தலைப் பட்டதாகவே கருதியிருக்கலாம். தன் மதத்திற்கு அபாயம் வராத வரையில் சமரச நோக்குடன் இருந்த குலோத்துங்கன் ராமாநுஜருடைய புகழ் தன் மதத்தவரையும் கவர்ந்திழுக்கவே தீவிரச் சைவனாகி அவரைத் துன்புறுத்தவும் துரத்தவும் முற்பட்டிருக்கிறான். சிதம்பரத்திலும் கோவிந்தராஜர் ஸன்னிதி நடராஜர் ஸன்னிதிக்கு இடையூறு என்று கருதி அந்த சன்னிதியை இடித்துப் பெருமாளையும் கடலில் எறிந்து விட்டான். இப்படி ஒரு கடவுளையே தூக்கிக் கடலில் எறிந்து விட்ட அரசனை மிக நல்லவன் என்றும், மீண்டும் அப்பெருமாளை பிரதிஷ்டை செய்த விஜயநகர அரசர்களை "வைணவமதத்தை மூர்க்கத் தனமாகப் பரப்ப முயன்றவர்கள்" என்றும் இளங்கோவன் குறிப்பிடுவதிலிருந்து அவருடைய பாரபட்சத் தன்மை நன்கு விளங்குகிறதல்லவா?

பிற்காலத்தில் தீட்சிதர்களும் அவ்வரசனது வழியையே பின்பற்றியிருக்கின்றனர். கோவிந்தராஜனது அர்த்த மண்டபம் பலி பீடம் இவைகளை இடித்ததாக அவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். இப்படி வன்முறையில் ஈடுபடுபவர்களை மிகவும் நல்லவர்களாகச் சித்தரித்துவிட்டு, எதுவுமே செய்யாத வைணவர்களை விஷமம் செய்பவர்கள் என்று கூறுவது நடு நிலைமை பத்ரிகைக்கு அழகல்ல.

திருமங்கை ஆழ்வார் ஸ்பஷ்டமாகவே **'அரவினணைப் பள்ளியின் மேல் திருமால்'** என்று பாடியிருக்கும் போது உட்கார்ந்த நிலையை மாற்றி சயனத் திருக்கோலத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவது தவறு.

கோவிந்தராஜருக்கு முன் காலத்தில் ப்ரம்மோத்ஸவம் நடந்திருக்கிறது என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனகிறார் இளங்கோவன். திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில **'தெருவில் திளைத்து வருவான் சித்திர கூடத்**

துள்ளானே'' (3—3—5), தெய்வப் புள் (கருடன் மீது) ஏறி வருவான் சித்திர கூடத்துள்ளானே'' (3—3—6), ''கை தொழ வீதிவருவான் சித்திர கூடத்து உள்ளானே'' (3—3—7) என்றெல்லாம் பெருமாளுக்கு வீதிப்புறப்பாடு நடந்திருப்பதை உறுதிப் படுத்துகிறார். (தற்போது ப்ரம்மோத்ஸவம் நடப்பது நின்றிருப்பதால் கோவிந்தராஜருக்கு வீதிப் புறப்பாடுகள் நடப்பதில்லை.) திருமங்கை ஆழ்வார் காலத்தில் நடந்து கொண்டிருந்த ப்ரம்மோத்ஸவம் குலோத்துங்கன் பெருமாளைக் கடலில் எறிந்ததும் நின்று விட்டிருக்கலாம். பின்னர் தொடர்ந்து நடந்த காலங்களிலும் சைவர்கள் பலி பீடத்தையும் மண்டபங்களையும் இடித்து உபத்ரவங்கள் செய்தபோது நின்று விட்டிருக்கலாம் இதை எதிர்த்துத்தான் நியாயமான முறையில் நீதி மன்றத்தில் முறையிட்டிருக்கின்றனர் வைணவர்கள் .

இதில் முக்யமான விஷயம், வழக்கு கொடுத்திருப்பவர்கள் அவ்வூரில் வாழும் வைணவபக்தர்களே தவிர பட்டாசாரியர்கள் அல்லர். அக்கோயிலில் இருக்கும் பட்டாசாரியர்கள் இரண்டே பேர்தான். அவர்களும் H R & C E போர்டால் நியமிக்கப் பட்டவர்கள்தான். விஷயம் இப்படியிருக்கையில் வழக்காடுபவர்கள் ஐம்பது பட்டாசாரியர்கள் என்றும், அவர்கள் இறைபணியை பொழுது போக்காகச் செய்பவர்கள் என்றும் உண்மையே கலவாமல் எழுதியிருப்பது பாரபட்சத்தைத் தான் காட்டுகிறது.

ஆகம சாஸ்திர முறைப்படி ப்ரதிஷ்டை செய்யப்பட்ட கோயிலில் ப்ரம்மோத்ஸவம் நடைபெற வேண்டியது நியதி என்றும், அப்படிச்செய்யாமல் போனால் அது மாபெரும் பாவம் என்றும் ஆகமமே விதிக்கிறது. தவிர்க்க முடியாத (வெள்ளம், யுத்தம் போன்ற) இயற்கைக் காரணங்களால் ஒரு ப்ரம்மோத்ஸவம் தடைபட்டால்கூட அதற்கு மிகப் பெரிய பரிகாரங்கள் செய்ய வேண்டும் என்றும் ஆகமம் கூறுகிறது. இக்காரணங்களால்தான் சிதம்பரத்தில் வாழும் வைணவ

பக்தர்கள் ஊரும் உலகமும் சுபீட்சமாக விளங்க, கோவிந்த ராஜனுக்கு நின்றுவிட்ட ப்ரம்மோத்ஸவத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று முயல்கின்றார்கள். இது பொழுது போக்கிற்காக என்பது மனதைப் புண்படுத்துகிறது.

தலபுராண வரலாற்றின்படி கூட, நடனமாடுவதில் சிறந்தவர் யார் என்று பரமசிவனுக்கும் உமைக்கும் போட்டி ஏற்பட்டதாகவும் தீர்ப்பை கூறுவதற்காக அவர்கள் திருமாலின் உதவியை நாடியதாகவும் அதன் காரணமாக மூவரும் தில்லை அம்பலத்திற்கு வந்ததாகவும் கூறுவர். ஆக கோவிந்தராஜரும் நடராஜரும் ஒரே காலத்தில் வந்தவர்கள் தான். இதில் யார் முன்னவர் யார் பின்னவர் என்று கேள்வியே இப்போது இல்லை. இப்போதுள்ள கேள்வியெல்லாம் ப்ரம்மோத்ஸவத்தைப் பற்றித்தான். பலகாலமாகவே சிதம்பரத்தில் வைணவத்தை ஆக்ரமித்து வருவது சைவம்; கோவிந்தராஜருக்கு ப்ரம்மோத்ஸவம் நடந்து விட்டால் வைணவம் சைவத்தை ஆக்ரமித்துக் கொள்ளும் என்பது வீண் புரளி. மற்றும் இவ்வழக்கின் விவரங்கள் நீதி மன்றத்தில் இருக்கும் போது, தீர்ப்பு வழங்க வந்த திருமாலுக்கு—நடுநிலைமையிலிருந்து பிறழ்ந்தது விசிட்டரே ஒரு தீர்ப்பு வழங்குவது விபரீதம்.

எனது இக்கடிதத்தை விட்டரில் வெளியிட்டு விசிட்டர் ஒரு நடுநிலைமைப் பத்ரிகைதான் என்பதை மறுபடியும் நிலை நாட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேங்கடகிருஷ்ணன்

ஆசிரியர்.

---

**குறிப்பு!** இது அச்சாகிக் கொண்டிருக்கும் போது விசிட்டர் பத்ரிகை நிறுத்தப்பட்டு விட்டதாக செய்தி வந்துள்ளது. அநியாயமாக கோவிந்தராஜன்பிரம்மோத்ஸவம் நிறுத்தப்படுவதை நியாயப் படுத்தப் பார்த்த விசிட்டரையே நிறுத்திவிட்டான் இறைவன். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்டக்ருதாம், தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே."

# ஸ்ரீவைஷ்ணவம்

திருப்பாவையின் மூவாரைப்படி வியாக்கியான அவதாரிகையில் முதல் முன்னம் 'தேஹாத்மாபிமானிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணுவோட்டை வாசி போரும்'' என்று அருளிச் செய்கிறார் வியாக்யான சக்ரவர்த்தி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை. தேஹாத்மாபிமானி என்பது தேஹத்தையும் ஆத்மாவையும் ஒன்றாகவே மதிக்கும் நம்போன்ற ஸம்ஸாரிகளை ''ஆத்மா வேறு, தேஹம்

## Dr. V.V. ராமானுஜம்

வேறு; தேஹம் ப்ராக்ருதம், அழியக் கூடியது; ஆத்மா அழியாத நித்யவஸ்து'' என்பதை தெள்ளத் தெளிய அறிந்து. தேஹத்தைப் பேணாமல் ஆத்ம நலனையே நாடி வாழ்ந்தவர்கள் ரிஷிகள். இவர்களுக்கும் நமக்கும் ஞானத்தில் நெடுவாசியுள்ளதை, பர்வதத்துக்கும் பரமாணுவுக்கும் உள்ள வாசியைக் காட்டி விளக்கப்படுகிறது இங்கு.

தம்தம் வினைப்பயனுக்குத் தக்கவாறு பலவிதமான சரீரங்களுடன் பிறப்பிக்கப்படுகிறான் ஜீவன். சரீரமில்லாமல் ஜீவன் எந்தக் காரியத்தையும் செய்ய இயலாதாகையால் இதைக் கொண்டு நல்வினை புரிந்து நற்பயனைப் பெறலாம். அல்லது தீவினை புரிந்து கெட்டும் போகலாம். வாழ்க்கையில் நல்வழி காட்ட நமக்கு பகவானால் அளிக்கப்பட்டுள்ள சாஸ்திரங்களின் துணைகொண்டு நன்னெறியில் வாழ்ந்து உய்வதற்காக இந்த சரீரத்தை நமக்கு அவன் தந்துள்ளான் என்பதை உணர்ந்து நாம் செயல் பட வேண்டும்.

திருவாய்மொழி 7—10—4 பாசுரத்தின் சட்டில் ஒரு அற்புதமான சரித்திரம் காட்டப்பட்டுள்ளது. இடையாற்றுக் குடிநம்பி என்பவர் ஸ்ரீரங்கம் நம்பெருமாளிடம் பேரன்பு பூண்டவர். தமது ஊரான இடையாற்றுக் குடியிலிருந்து நம் பெருமாள் கண்டருளும் திருநாள் ஒவ்வொன்றுக்கு வந்து பெருமாளை உள்ளன்புடன் ஸேவித்துப் போவார் ஸேவித்த ஒரு திருநாளுக்கும் மேலே வரும் திருநாளுக்கும் இடையிலுள்ள காலத்தை, நடந்த திருநாளில் அரங்கன் திருவீதி உலாவின அழகு, பாகவத ஸம்ருத்தி இவைகளை நினைந்தே போது போக்குவராம். ஒரு ஸமயம் தாம் ஸேவித்த உத்ஸவ விவரங்களைப் பேசி மகிழ்ந்திருந்தபோது, நண்பர் ஒருவர், "அமுது செய்கைக்குப் போது வைகிற்று" என்ன, நம்பி, "ஆகில் வருகிற திருநாள் வைகிற்று" என்றாராம். "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் என்கிறபடியே, நமது நம்பிக்கு நம்பெருமாள் உத்ஸவம் ஸேவிப்பதே வாழ்க்கையில் எல்லாமாக அமைந்தது. இவர் தமது நூறுவது வயதில், தேஹம் மிகத் தளர்ந்தமையால் ஒரு பிரம்மோத்ஸவத்தில் முதல்நாள் புறப்பாட்டுக்கே வந்து ஸேவிக்க முடியாமல் போய் விட்டது. தொண்டர் குழாத்தில் இவரைக் காணாத பெருமாளும், "நம் இடையாற்றுக் குடியான் வந்திலனே; நம் கண்ணுலமன்றோ?" என்று குறைப்பட்டாராம். நம்பியும் ஆறுவது திருநாளன்று வந்து ஸேவித்திருக்கச் செய்தே பெருமாளும் கண்டு உகந்து, "உனக்கு நான் செய்ய வேண்டுவது என்" என்று கேட்டருள நம்பியும் "தேவரீர் தந்தருளின இச்சரீரத்தைக் கொண்டு போரக் காரியம் கொண்டேன். இனி போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி ஜரித்தது" என்று விடை தந்தாராம். பெருமாளும், "வாராய்! மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனே இரு" என்று திருவாய் மலர்ந்தருளி மேலே எழுந்தருள, அங்கேயே நம்பிக்குச் சரீர வியோகமாகி, திருநாட்டுக் கெழுந்தருளினாராம்.

பெருமாள் கேட்டருளிய கேள்விக்கு நம்பிதந்த பதிலை நாம் அவர்சரித்திரத்தைப் பின்னணியில் வைத்து ஆழ்ந்து நோக்கவேண்டும். அவர்சரித்திரம் மிகப்புனிதமானது. கால்கள் எம்பெருமான் திருமுன்பே செல்வதற்கும், கைகள் தொழுவதற்கும், கண்கள் அவனழகைக் காண்பதற்கும், வாய் அவன் புகழ் பாடுவதற்கும், செவி அடியார் அவன் புகழ்பாட அதைக்கேட்பதற்கும், நெஞ்சு அவனை நினைந்து உருகுகைக்குமே ஏற்பட்டவை என்ற நிலையில் வாழ்ந்து உய்ந்தவர் இடையற்றுக்குடிநம்பி இவர் போல் வாழ்நாளைக் கழிக்கக் கூடியவர் "ஒரொருவர் உண்டாகில் அத்தனை காண் உள்ளமே" என்ற கணக்கில் தான் இருக்கக் கூடும்,


முமுக்ஷுப்படி என்ற ரஹஸ்யத்தில், "ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து, ஈச்வரகைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ் சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினன்" என்பது லோகாசார்யன் திருவாக்காகும்: நாம் நம்மைப்பற்றியும் (ஆத்மஸ்வரூபம்) அறியவில்லை; எம்பெருமானைப்பற்றியும் (பரஸ்வரூபம்) அறியவில்லை. உண்மை அறிவு இல்லையே — அதன்படி இருக்க வேண்டிய ஒழுக்க மில்லையே என்ற வருத்தமும் இன்றியே பிறப்பதும் சாவதுமாகிற இந்த ஸம்ஸாரத்திலே கிடந்து துக்கச்சுழலில் உள்ளோம் என்பதையும் உணராமல் போதுபோக்குகிறோம். நம் நிலை கண்டு இறங்கி நமக்கு மெய்யறிவைப் புகட்டுவதற்காக, இதை திருமந்திரத்தின் மூலமாக நமக்கு வெளியிட்டருளினன் நாராயணனான ஸர்வேச்வரன்.

(தொடரும்)



7, தெற்குமாட வீதி,
திருவல்லிகேணி
சென்னை—600 005.

# கீதாசார்யன்-22



ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.**

தொகுதி 2 | ரௌத்திரி ௵ | ஆடி மீ | ஜூலை 80 | பகுதி 10

## ஆலோசகர் குழு

சாண்டில்யன் (தலைவர்)
Dr. V. V ராமானுஜம்
K. R. ஸ்ரீனிவாஸாசாரியர்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியர்
K. E. B. ரங்கராஜன்

★

## ஆஸ்திகரே !

அடுத்த இதழ் 'ஸ்ரீஜெயந்தி மலராக' வெளி வருவதை யாவரும் அறிந்திருப்பீர்கள். பல புதிய பகுதிகளுடன், சந்தாதாரர்களுக்காக மட்டுமே கிடைக்கக் கூடியதாக வெளியிடுகிறோம். ஆண்டு மலர் கிடைக்கவில்லையே என்ற பல சந்தாதாரர்களின் குறையை நிவர்த்திக்கவே இம்மலரை ஆவணி இதழாக வெளியிட்டு, எல்லா சந்தாதாரர்களுக்கும் அளிக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

இனி, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஒரு சிறப்பு மலர் வெளியிட எங்கள் நிர்வாகக் குழுவும், ஆலோசனைக் குழுவும் முடிவு செய்துள்ளன. அதன்படி, ஒவ்வொரு மலரும் ஒவ்

## *BOARD OF DIRECTORS*

P. T. SUNDARA VARADAN
Director (Finance)

N. GANAPATHY
Director (Circulation)

R. RAVICHANDRAN
Director (Public Relations)

P. T. SRINIVASAN
Director (Administration)

★

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| **போஷகர்** | ரூ. 1000 |
| **ஆயுள் சந்தா** | ரூ. 100 |
| **வருடச் சந்தா** | ரூ. 10 |

**விலை ரூ 1-00**

வொரு பகுதியில் ஒரு விழா நடத்தி வெளியிடப்படும். இத ஞல் இரண்டு வித நன்மைகள் (1) வாசகர்களுடன் நேருக்கு நேர் சந்தித்து தொடர்பு கொள்ள முடிகிறது. (2) கீதாசார் யன் பணி இன்னும் அதிக வாசகர்களுக்கு தெரிய வாய்ப்பு ஏற்படுகிறது.

முதல் கட்டமாக, ஸ்ரீஜெயந்தி மலர், சென்னை நகரில் மாம்பலத்தில் உள்ள **'சிவா விஷ்ணுகோயிலில் ஆகஸ்டு 15ஆம் தேதி மாலை 6-30 மணிக்கு** நடத்த ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு ஆஸ்தான **கவிஞர் கண்ணதாசன்** சிறப்புரை ஆற்றுகிறார். மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர்

இதனையே எங்களது அழைப்பிதழாக ஏற்று வழக்கம் போல் திரளாக வந்திருந்து விழாவினைச் சிறப்பித்துத் தர வேண்டுகிறோம்.

இவ்வாறாக வருடத்திற்கு நான்கு இடங்களில் விழா செய்ய வேண்டும். வாசகர்கள் எங்களுக்கு இவ்வகையில் ஏதாவது உதவி செய்ய முடியுமாயின் எங்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கக் கோருகிறோம். குறிப்பாக, இடவசதி ஏற் பாடு செய்து கொடுத்தால் அவ்விடத்தில் விழா நடத்த நாங் கள் ஏற்பாடு செய்வோம். அடுத்த மலர் **'மார்கழி மலர்'.**

உங்களது பெருவாரியான ஆதரவை கடிதம் மூலம் வரவேற்கிறோம்.

இப்படிக்கு,
**இரவிச்சந்திரன்**
**இயக்குநர் (பொதுஜன தொடர்பு)**

# ஆண்டாள்

(எல்லோரும் கீதை மாமாவை ஸேவிக்கின்றனர்)

**கீமாமா :** நீங்காத செல்வம் நிறைந்து இன்புறுவீர்களாக.

**பக்திசாரன் :** இன்று ஆண்டாளின் கதையாதலால் அவள் அருளிச் செய்த திருப்பாவை வாக்கியங்களாலேயே எங்களை வாழ்த்துவது மிகவும் பொருத்தம், மாமா எனக்கு ஆண்டாள் கதை ஏற்கெனவே தெரியும் ஆகையால் வேறு ஏதாவது கதை சொல்லுங்களேன்.

**கீமாமா :** இல்லையப்பா உனக்கு மட்டும் தெரிந்தால் போதாது, மற்றவர்களுக்கும் தெரிய வேண்டாமா? சரி, வேண்டுமானால் கதையே நீயே சொல்லேன்.

**பக்திசாரன் :** ஆண்டாள் எனப்படும் கோதை பெரியாழ்வாரின் மகள் இவள் ஆடி மாதம் பூர நக்ஷத்திரத்தில் பிறந்தாள். பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளஸி தோட்டத்தில் திருத்துழாய் செடிக்கு அடியில் கிடைத்தாள். பெரியாழ்வார் தினந்தோறும் ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் வட பெருங்கோயிலுடையானுக்கு மாலை சாத்துவதற்காக வரும்போது ஒரு நாள் கோதையை கண்டெடுத்தார். தனக்கு குழந்தையே இல்லாததால் தன் குழந்தையாகவே கோதையை வளர்த்தார்.

**பக்திசாரன் :** இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து, இளமை முதலே கண்ணன் பெயரில் ஆழ்ந்த பக்தி கொண்டாள் கோதை, பெரியாழ்வாரும் அவளுக்கு எல்லாவித கல்விகளையும் முறைப்படி கற்று கொடுத்தார்.

**சுதர்சன் :** கண்ணன் பெயரில் ஆழ்ந்த பக்தி கொண்ட கோதை, பெரியாழ்வார் வட பெருங்கோயிலுடையானுக்கு சாத்தும் மாலையை தானும் அணிந்து அழகு பார்க்க

எண்ணினாள். பெரியாழ்வார் மாலையைக் கட்டிவைத்தபின் அவர் இல்லாத சமயம் பார்த்து, அந்த மாலையை தினமும் அணிந்து அழகு பார்த்து மறுபடியும் அதே இடத்தில் வைத்து விடுவாள். இது தினந்தோறும் நடந்தாலும், பெரியாழ்வார் அதனை அறியாமல் அதே மாலையை எம்பெருமானுக்குச் சாத்தி வந்தார்.

**பக்திசாரன் :** திடீரென்று ஒரு நாள் பெரியாழ்வார் அச்செய்கையை பார்த்து மிகவும் வேதனைபட்டார். தன் மகளைக் கண்டித்து "பெருமாளுக்கான மாலையை அணிந்து கொண்டு விட்டாயே! இனி பெருமாளுக்கு எப்படி மாலை சாத்துவேன்?" என்று மனம் கலங்கினார். அதனால் அன்று பெருமாளுக்கு மாலை சாத்தவில்லை.

**சுதர்ஸன் :** உடனே அன்று இரவு பெருமாள் பெரியாழ்வார் கனவில் தோன்றி "ஏன் இன்று மாலை கொண்டு வரவில்லை" என்று வினவ பெரியாழ்வாரும் அதற்கான காரணத்தைக் கூறினார். உடனே பெருமாள் "அவள் சூடிக்களைந்த மாலையே நமக்கு மிகவும் விருப்பம். ஆகையால் இனிமேல் அவள் அணிந்து களைந்த மாலைகளையே கொண்டு வருவீர்" என்று கூறி மறைந்தார். சரிதானே மாமா.

**கி. மாமா :** பரவாயில்லையே! ஆண்டாள் கதை எல்லோருக்குமே தெரிந்திருக்கும் போலிருக்கிறதே! பெருமாள் கோதை அணிந்த மாலையை உவந்து ஏற்றதால், இவள் பிராட்டியின் மறு அவதாரம் என்பதை உறுதி செய்து கொண்டார் பெரியாழ்வார். அன்று முதல் அவள் அணிந்து களைந்த மாலைகளையே வடபெருங் கோயிலுடையானுக்கு சாத்தி வந்தார்.

**ஆண்டாள் :** அடுத்தது ஆண்டாள் ரங்கமன்னார் திருக் கல்யாணம்தானே!

**கி. மாமா :** கோதை என்கிற ஆண்டாள் பருவ வயது அடைந்ததும் கண்ணன்மேல் ஆறாத காதல் கொண்டாள்.

தனது கணவனாக கண்ணனைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைக்கவில்லை. அதற்காகவே விசேஷ நோன்பும் நோற்றாள்.

**பக்திசாரன்:** மார்கழி மாத நோன்புதானே அது! மார்கழி முப்பது நாட்களும் முப்பது பாட்டுக்கள் பாடி நெய்யுண்ணாமல், பாலுண்ணாமல் விடியற்காலையில் நீராடி கண்ணனை நினைத்து உருகினாள். அதுதான் "திருப்பாவை"

**கி. மாமா:** ஆமாம் அதுதவிர "நாச்சியார் திருமொழி" எனும் பிரபந்தத்தையும் அருளிச் செய்துயிருக்கிறாள். அதில் கண்ணனோடு மானசீகமாக கல்யாணம் செய்து கொண்டு அதன் நிகழ்ச்சிகளை அழகாக விவரிக்கிறாள்.

**பராங்குசன்:** கல்யாணங்களில் கூடப் பாடுவார்களே "வாரணமாயிரம் சூழவலம் செய்து" அதுதானே

**கி மாமா:** 'வாரணமாயிரம்' என்ற பத்துப் பாட்டில் தான் கலயாணத்தின் போது நடக்கும் சடங்குகளை வரிசைப் படுத்திப் பாடியுள்ளாள். இவ்வாறாக, ஆண்டாளின் மனதை யறிந்த பெரியாழ்வார் மிகவும் கவலை கொண்டார். பெருமானைத் தனது மகளுக்கு எவ்வாறு மணம் முடிப்பது என்று தெரியாமல் கலங்கிய போது, ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் திருவரங்கன் பெரியாழ்வாரின் கனவிலே தோன்றி "இவளை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று அருளினார். அதே சமயம் கோவில் நிர்வாகத்தினர் கனவிலும் தோன்றி "ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று ஆண்டாளை முத்துப் பல்லக்கில் ஏற்றி வாருங்கள் எனக் கட்டளையிட்டார். அவ்வாறே எல்லா பரிகாத்தாரும் (கோவில் நிர்வாகிகள்) பெரியாழ்வாரை வந்தடைந்து அரங்களின் ஆணையைக் கூறினர். அதைக்கேட்டு மனமகிழ்ந்து பெரியாழ்வாரும் ஆண்டாளுடன் ஸ்ரீரங்கம் சென்றார். அரங்கன் சன்னிதியை அடைந்த போது காந்தத்தை கண்ட இரும்பு போல் எம்பெருமான் ஆண்டாளைக்

கவரத் தொடங்கியதால், ஆண்டாள் நம்பெருமானது திரு மேனியிலே கலந்து அவனை என்றும் பிரியாமல் இருந்தாள்.

**கோவிந்தன் :** ஆண்டாள் என்ற பெயர்க் காரணத்தைக் கூறவில்லையே?

**கி மாமா :** அனைத்துலகத்துக்கும் அன்னையாய் விளங்கு கின்ற மஹாலக்ஷ்மியின் அவதாரம் என்பதால் ஆண்டாள் எனப்பட்டாள். இக் கதையின் முக்கியமான விஷயம் என்ன வென்றால், ஆண்டாள் தான் மட்டும் எம்பெருமானை அடைந்து பெருமைபட்டதோடு அல்லாமல் தன்னை வளர்த்த பெரியாழ்வாருக்கும் 'பெருமாளின் மாமனார்' என்ற உயர்ந்த பெருமையையும் தேடித் தந்தார். அம்மா திரியே நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்கும் சிறந்த பெயர் வாங்கிக் கொடுக்க உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் அடுத்த மாதம் சந்திப்போம்.

Anything & Everything in
Real Estates
(Buying & Selling Properties)
Civil Constructions
Please Contact

MINERVA ENTERPRISES

2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam, MADRAS-600 034.

# ஸப்தகிரியின் உயர்ந்த பண்பு

இந்தியாவிலேயே மிகப்பெரிய தேவஸ்தானத்தால் நடத்தப்படுவதும், சுமார் இருபத்தைந்து வருடங்களாக வெளிவந்து கொண்டிருப்பதுமான ஸப்தகிரி எனும் பத்ரிகையிலிருந்து, இளைஞர்களால் நடத்தப்படுவதும், ஆரம்பித்து இருபத்தைந்து மாதங்கள் கூட நிரம்பப் பெறாததுமான நமது கீதாசார்யன் பத்ரிகையினுடைய ஒத்துழைப்பைக் கோரி கடிதம் வந்திருக்கிறது. (அதை அடுத்த பக்கத்தில் காணலாம்). இது 'ஸப்தகிரி'யினுடைய உயர்ந்த பண்பைத்தான் காட்டுகிறது. அவர்களுடைய அந்த நற்பண்பை உளமாரப் பாராட்டுகிறோம். கீதாசார்யன் வாசகர்களும், எழுத்தாளர்களும் கீதாசார்யனுக்கு வரவேற்பளிப்பது போலவே ஸப்தகிரிக்கும் வரவேற்பளித்து கதைகட்டுரைகள், எழுதியனுப்பியும், ஆலோசனைகள் வழங்கியும் ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். (ஆ—ர்)

---

PHONE : 442407

VUMMIDI

Bangaru Chetty Trust

JEWELLERS and DIAMOND MERCHANTS

vbc

PANAGAL PARK
MADRAS - 600 017

TELEX } RUPATI 403—202 GRAMS : DEVASTHAN
TIRUMALA 403—208 OFFICE OF the Editor

FROM N. S. Ramamurthy, M.A.
Sub-Editor

T. T. DEVASTHANAMS
TIRUPATI.

*R. O. C. No* Pdl/Editor/
Tamil/80

*To* M. A. Venkatakrishnan, M.A,
7. South mada st,
Triplicane-Madras 600005

Date 4-7-80

*Sir*,

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சுமார் 25 ஆண்டுகளாக சமய மாத இதழ் ஒன்றினை வெளியிட்டு வருவதும், தற்போது அவ் இதழ் 'ஸப்தகிரி' எனும் பெயரில் வெளிவருவதும் தங்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். வளர்ந்து வரும் 'ஸப்தகிரி' மேன் மேலும் வளர்ச்சியடைய உங்களுடைய உதவியை நாடுகின்றேன். தயை கூர்ந்து நீங்கள் எங்கள் இதழுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் சமயம், இலக்கியம் சம்பந்தப்பட்ட கதை கட்டுரைகளை அனுப்பியும், மேலும் உங்கள் பத்திரிகை எழுத்தாளர்கள் மற்றும் இளம் எழுத்தாளர்கள் ஆகியோரை எங்களுக்கு அறிமுகப்படுத்தியும் உதவி செய்தால், நாங்கள் மிகவும் கடப்பாடு யுடைவோமாவோம்.

*நன்றி.*

உங்கள் பணிவன்பான
N. S. Ramamurthy.

எங்கள் முகவரி :

N. S. Ramamurthy,
Sub Editor,
Editor Office (T. T. D)
Alipiri Road
TIRUPATI

# பெயர்களாயிரம்

உலகனைத்தும் தாமாயிருக்கிறார்; எல்லாப் பொருள்களிலும் கரந்து உறைகிறார் என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் முதல் இரு திருநாமங்களாகிய விச்வம், விஷ்ணு: என்ற திருநாமங்களால் கூறப்பட்டன.

---

## விசாகம்

---

இனி மூன்றாவது திருநாமம் வஷட்கார: என்பது. இதன் பொருள்: (எல்லாப் பொருள்களிலும் தாம் பரவியிருப்பதோடல்லாமல்) அப்பொருள்களையெல்லாம் தன் இஷ்டப்படி நடக்குமாறு வசப்படுத்தி இருப்பவர் என்பது.

காற்றானது எல்லாப் பொருள்களிலும் உட்புகுந்திருக்கிறது. (காற்று புகாத இடமே கிடையாது என்று ஓரளவுக்குச் சொல்லலாம்.) ஆனால் அப்பொருள்களை தன் வசப்படி நடத்தும் திறமை காற்றுக்கு உண்டோ? கிடையாது. அது போல் இல்லாமல் பகவான் எல்லாப் பொருள்களையும் தன் நினைவின்படி நடத்தவல்லவன்.

'அவனின்றி ஓரணுவும் அசையாது என்ற மூதுரைக்கு ஆதாரமே இத்திருநாமம்தான். இந்திரன், பிரமன், சிவன் போன்ற தெய்வங்களுக்கும் அந்தராத்மாவாய் உறைகிறான் ஸ்ரீமந்நாராயணன் என்று சொன்னோமல்லவா? அந்தத் தெய்வங்களும் பக்தர்களுக்கு அருளும் சக்தியை எவ்வாறு பெறுகின்றன என்ற கேள்விக்கு இத்திருநாமம் விடையளிக்கிறது தானுட்புகுந்தவற்றைத் தன் வசப்படி நடத்தவல்ல இறைவன்தான் அத்தேவதைகளுக்கு அச்சக்தியை அளிக்கிறான். ஆக, பிற தெய்வங்களால் பெறப்படும் பலன்களுக்கும் ஸ்ரீமந் நாராயணனே காரணம் என்பது தெளிவாகிறது

---

குறிப்பு: பல கோயில்களில் தவறாக விச்வஸ்மை என்றே அர்ச்சனை செய்கிறார்கள், திருந்த வேண்டும் என்று எழுதியிருந்தோம். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி கோயிலில் மிகவும் சரியாக விச்வாய நம: என்றே அர்ச்சனை செய்யப்படுகிறது என்று ஸ்ரீ S. வெங்கடகிருஷ்ணபட்டாசாரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவருக்கு எமது நன்றி.

அடுத்த இதழில் ஆரம்பமாகும்

# கண்ணன் கதைகள்

## முன்னுரை

வழி வழியாக நிலைத்து நின்று பெருமைபெற்று வரும் பாரத நாட்டின் பழம் பண்பாடு, பழஞ்சிறப்பு இவைகளுக்கு இன்றைய அடையாளங்கள் என்னவென்று பிறநாட்டார் கேட்க நேர்ந்தால் நாம் எதைச் சுட்டிக் காட்டுவோம்? எவற்றைக் கொண்டு நம்முடைய பழைமையைக் காப்பாற்றிக் கொள்வோம்? இத்தகைய சந்தேகங்கள் நமக்கு எப்போதாவது எதற்காவது ஏற்பட்டிருக்கிறதா?

ஏற்படாவிட்டால் என்ன? நாம்தாம் ஏற்படுத்திக் கொள்வோமே! சந்தேகங்கள் ஏற்பட்டால்தானே விடைகளைக் காண வேண்டுமென்ற ஆர்வமே தோன்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது? நம்மிடம் நமக்கே உரிமையுடைய மூன்று மாபெரும் இதிகாச காவியங்கள் இருக்கின்றன. அம்மூன்று காவியங்களும் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு வகையில் நமது பண்பாட்டின் தொன்மையையும் பெருமையையும் பறைசாற்றி உலகுக்கு அறிவிக்க கூடியனவாக இருக்கின்றன.

இராமாயணம் பெண்மையின் வெற்றியைச் சொல்கிறது. பாரதம் அறத்தின் வெற்றியைச் சொல்கிறது. ஆனால் பாகவதம் யாருடைய வெற்றியைச் சொல்லுமோ என்று எண்ணுகிறீர்கள் அல்லவா? உலகில் அறத்தோடு இயைந்தனவும் நல்லனவும் ஆகிய யாவும் வெற்றி பெறுவதற்கு மூலமான பரம்பொருள் ஒன்று இருக்கிறதென்று நமக்குத் தெரிந்திருக்கின்றதே; அந்தப் பரம் பொருளின் அசாதாரணமான வெற்றியை விவரிப்பதுதான் பாகவதம்.

எல்லா மனிதர்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் வெற்றியைக் கொடுக்கிற—கொடுத்த—கொடுக்கும் பரம் பொருளின் வெற்றியைக் கூட வியப்புடன் நோக்க

வேண்டுமா? வியப்பு என்பது பார்க்கிற பொருளில் இல்லை. பார்க்கப்படுகிற விதத்தில்தான் வியப்போ வியப்பின்மையோ இருக்கிறது. மனித உலகத்தில் மனிதர்களுக்கிடையே கடவுள் தன் இதயக் கருத்துக்களை எளிய முறையில் நிறைவேற்றிக் கொண்டதைப் பாகவதம் சொல்கிறது. பகவானைப்பற்றியது பாகவதம். கண்ணனின் திருவிளையாடல்கள் நிறைந்த ஒரு தொகுதியென்றே பாகவதத்தைக் கூறலாம்.

இங்கே மூன்று இதிகாசங்களின் நாயகர்களைப் பற்றியும் ஒரோர் நினைவு எழுகின்றது. இராமனைப்பற்றிச் சிந்திக்கும்போது, உரிமையை நிலைநாட்டித் தீமையை அழிப்பதற்காகப் போராடிய தெய்வீக வீரத்தலைவன் ஒருவனின் உருவம் காட்சியளிக்கிறது. பாரதத்தின் கதாநாயகனென்று குறிப்பிட்ட யாரையும் தனித்தனியாகச் சொல்லிவிட முடியுமா? பாண்டவர்கள் ஐவருமே பாரதக் கதைக்கு நாயகர்கள்தாம். பாண்டவர்கள் சத்தியத்தையும், தருமத்தையும் நம்பிப் போராடி வெற்றி பெற்ற நினைவு பாரதக் கதையைப் பற்றி எண்ணும்போது தோன்றுகிறது. ஆனால் பாகவதக் கதையைப்பற்றி நினைக்கும் போது அற்புதமும், அதிசயமும், வியப்பும் கலந்த ஒருவகைப் புதிய அனுபவம் ஏற்படுகிறது நமக்கு.

கண்ணன் என்னும் தெய்வீகக் குழந்தை ஒன்று இன்ப துன்பங்கள், ஆசை, பாசங்கள், அவலக் கவலைகள் மிகுந்த மனித முயற்சிகளுடன் விளையாடிச் சிரித்துக்கொண்டே அவற்றை வெல்கிறது. வென்று முன்னேறுகிறது. தன் பிறவிப் பயனை முழுமையாக்குகிறது! தெய்வத்தின் இந்த விளையாட்டை அழகாக விவரித்துச் சொல்வதுதான் பாகவதக் கதை. பாகவதக் கதையை எளிய தமிழில் விவரித்துக் கூறும் தொடர்தான் இங்கு மலரும் இக் கண்ணன் கதைகள் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்;

நா. பார்த்தசாரதி

# ‘‘மாண்பு மிகு மண்டோதரி’’

கு. சடகோபன், சங்கர்நகர்

மயன் மகள் மாண்பு மிகு மண்டோதரி மூவுலக நாயகன் இராவணனின் பட்டத்து ராணி. அக்க குமாரனின் அன்னை. அரக்கர் குலத்தின் அடலேறு, வீரத்தின் விளைவிடம் மேக நாதனின் தாய்.

காவிய நாயகியோ என்று ஐயுறும் வண்ணம் மண்டோதரியைக் கம்பன் படைத்துள்ளான். அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகியோர் பணி செய்ய பள்ளியில் கண் வளரும் மண்டோதரியை தன் காவிய அரங்கில் கம்பன் முதன் முதலாகக் காட்டுகிறான். இராம தூதனும் அனுமனே திகைத்து சானகியோ என்று சங்கை கொள்கிறான்.

**‘‘தகைவில்லான்**
**அன்னவளாகிய சானகி இவளென அயிர்த்து’’**

என்பான் கம்பன். அனுமனுக்கே சீதையோ என்ற ஐயத்தை ஏற்படுத்திய மண்டோதரியின் மாண்புகளை ஒரு சிறிது நோக்குவோம்.

இலங்கை வேந்தன் சீதையைச் சிறையெடுத்த நாள் முதல் மண்டோதரியின் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. மண்டோதரிக்குத்தான் இந்த நிலை என்றில்லை. இராவணனின் ஏனைய மனைவியர்க்கும் இதுவே நிலை. அந்தப்புரத்தில் சோக இருள் கவிழ்ந்து பரவ அவன் மனைவியர்கள் அவன் பிரிவைப் பொறுக்கமாட்டாமல் அழுது அரற்றி வாடித் தேய்கிறார்கள்.

**‘‘அழுது செய்வதென்? ஆணை அரக்கனை**
**எழுதலாங் கொல் என்று எண்ணுகின்றார்சிலர்’’**

ஆனால் மண்டோதரியையோ இத்தகைய பாதிப்புக்கள் எவை யும் நெருங்கியதாகக் கம்பன் காட்டவில்லை. அசோக வனத் தின் சிறையில் தவம் செய்த தையலின் பிரிவுநோயை நெஞ் சுருக வர்ணித்து கற்போர்க்கு பராங்குச நாயகியையும், பர கால நாயகியையும் நினைவு கூரச்செய்து விப்ரலம்ப சிருங்காரச் சுவையின் கொடுமுடியையே எட்டிப்பிடித்த கவிச்சக்ரவர்த்தி கம்பன், மண்டோதரி மாட்டு மாற்றாந்தாய் நிலையில் நின்று விடுகிறான். பிரிவு நோயால் பிணிக்கப்பட்டவளாகக் கம்பன் அவளைப் படைக்க விரும்பவில்லை போலும்

மண்டோதரி மூவுலக நாயகனின் பட்டத்துராணி அரி யணையில் அமர்ந்து அரக்கர்கோனுடன் இலங்கைச் செல் வத்தை நுகர்ந்து வந்த காலத்தில் அவள் அவனுக்கு அறிவுரை கள் கூறியதில்லை. தாரை தன் கணவன் வாலிக்கு அறிவுரை கூறியதைப் போன்றோ, இராவணன் மனைவியருள் தானமாலை யைப் போன்றோ அவள் அறிவுரை கூறவில்லை. தானமாலையை விட, தாரையைவிட, மண்டோதரி கூர்த்த அறிவுடையவளே. இராவணன் தேடியிருக்கும் நெடும்பகை யாரென்பதையும் அவள் அறிவாள். ஆனாலும் அவள் இராவணனுக்கு அறி வுரை கூறவில்லை. அவனுடைய வரபலத்தில் மிகுதியும் நம்பிக்கை உடையவளாகிய அவள் அவனுக்கு இடித்துரைக்க விரும்பவில்லை.

"திரைகடைஇட்டு அளப்புஅரிய வரமென்னும்
பாற்கடலைச் சீதையென்னும்
பிரைகடைஇட்டு அழிப்பதனை அறிந்தேனோ
தவப்பயனின் பெருமை பார்ப்பேன்."

என்று இறுதியிலே மண்டோதரி புலப்புவதிலிருந்து அவள் எல்லாம் தெரிந்திருந்தும் அரக்கனின் தவபலத்தில் நம்பிக்கை கொண்டு வாளா இருந்தாள் என்பது தெரிகிறது.

மண்டோதரியை நல்ல தாயாகக் கம்பன் படைத்துள்ளான். அவளுடைய தாய்ப்பாசத்தின் ஆழத்தை குமாரர்கள் இறந்து பட்ட காலத்தில் அவளுடைய பெரும்புலம்பல்களின் மூலமாகக் கம்பன் காட்டுகிறான். மண்டோதரியின் இளைய மகன் அக்ககுமாரன் அனுமனால் கொல்லப்பட்ட காலத்தில் அவள் துயரம் எல்லையைத் தாண்டுகிறது. என்ன செய்வதென்று அறியாமல் அவள் இராவணன் பாதங்களிலேயே வீழ்ந்து விடுகிறாள்.

மிகச்சிறந்த போர்வீரனை மேகநாதனின் தலையற்ற உடலைக் கண்டதும் மண்டோதரி புரண்டு அழுது புலம்புகிறாள். மாவீரனைப் பெற்றெடுத்த மாதரசி மண்டோதரி தன் மகனின் வீரதீர விளையாட்டுக்களை இனி எங்கு சென்று காண்பேன் என்றே ஏங்குகிறாள்,

**"தாளரிச் சதங்கை யார்ப்பத் தவழ்கின்ற பருவந்தன்னில்**
**கோளரி இரண்டு பற்றிக் கொணர்ந்தனை கொணர்ந்து கோபம்**
**மூளுறப் பொருத்தி மாடமுன்றிலின் முறையினோடு**
**மீளரு விளையாட்டின்னங் காண்பேனோ விதியிலாதேன்"**

என்று புலம்புகிறாள். அந்நிலையிலும் சீதையைப் பற்றிக் குறைவாக ஒரு சொல்கூடப் பேசவில்லை. போர்க்களம் சென்ற அரக்கவீரர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பட்டு மடிவதைக் கண்டு மருண்ட மண்டோதரி இராவணற்கும் இதுவே தான் கதியாகி விடுமோ என்று கலங்குகிறாள்.

**"அச் சீதை யென்று அமிழ்தில் தோய்ந்த நஞ்சினால்**
**இலங்கை வேந்தன் நானே இத்தகையன் அன்றோ"**

என்று வருந்துகிறாள்.

காவியத்தில் இராவணன் மனைவியர் இருவருக்குமே புத்திர சோகம் ஏற்படுகிறது. மண்டோதரியும் புலம்புகிறாள்

தானமாலேயும் புலம்புகிருள். தானமாலே புலம்பலில் இராவ ணனே இடித்துரைப்பதைக் காண்கிருேம். மண்டோதரி புலம் பலில் அவ்வாறு காண முடியவில்லே. தானமாலே இராவண வின் தகாத காதலேப் பேய்க் காமம் என்று சாடுகிருள். மண்டோதரியோ சீதையின் பேரழகே இராவணனேக் காதல் கொள்ளச் செய்தது என்று நொண்டிச் சமாதானம் சொல்லி தன் கணவனின் தவறை மூடி மறைத்து, "ஏந்து புயத்து இராவணனுர் காதல்" என்று ஏற்றிப் பேசுகிருள். தானமாலே யின் புலம்பலில் இராவணனேச் சீண்டி விடுகின்ற போக்குக் காணப்படுகிறது. மண்டோதரியின் புலம்பலில் நாகரிகத்தின் தனி சிறந்த நளினமான நடனத்தைக் கண்டு களிக்க முடிகிறது. தானமாலேயைப் படைத்து மண்டோதரியின் செம்மாந்த நிலேயைக் கம்பன் உயர்த்திக் காட்டுகிருன்.

மண்டோதரி போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் இராவ ணனின் உடலில் கிடந்து புரண்டு அழுது புலம்புகிருள்.

மண்டோதரியின் புலம்பல்கள் கம்பனேக் கவிச்சக்ரவர்த்தி யாகக் காட்டுகின்றன. திருக்கைலாய பர்வதத்தைத் தூக்கிய திடமிகு உடலம் எல்லாம் இராம பாணங்கள் தைக்கப் பெற்றிருப்பதைக் கண்டு புலம்புகிருள்.

"வெள்ளருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்க இடமின்றி உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒரு வன்வாளி"

என்பது அப்புலம்பல். சீதையைப் பிறர் நெஞ்சுபுகாக் கற்புடையாளாக்கிக் காட்டுகிறது இப்பாடல் மண்டோதரியைப் புலம்ப வைத்து சீதையின் கற்பை நிலைநாட்டுகிறான் கம்பன். வீடணனால் அசோக வனத்தில் சீதைக்கு விடுதலை கிடைப்பதற்கு முன்பே இராவணன் இதயமாஞ்சிறையிலிருந்து இராம பாணங்கள் விடுதலை வாங்கித் தந்துவிட்டதை மண்டோதரி புலம்பலில் உணர்த்துகிறான். சீதைக்கு அசோக வனம் இரண்டாம் சிறை. முதல்சிறை இராவணன் இதயம். மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் எயிலுடை இலங்கை வேந்தன் இதயமாஞ்சிறை வைத்தான் அல்லவா! இதயச் சிறையிலிருந்து அவன் பெற்ற விடுதலையை மண்டோதரி மூலம் கூற வைத்து கம்பன் காவியப் பாங்கை நிலை நாட்டு கிறான்

இராவணனுக்கு நேர்ந்துவிட்ட பேரழிவிற்கு சூர்ப்பணகையே காரணம் என்பது மண்டோதரியின் துணிபு. சூர்ப்பணகையின் சூழ்ச்சியே இந்திரனின் பெருந்தவமாயிற்று என்கிறாள் மண்டோதரி. பலவாறாகப் புலம்பி ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விட்டு தன் மூச்சையும் விடுகிறாள். மண்டோதரி மறக் கற்புடையவளாக நாயகனுடன் மண்ணுலக வாழ்வை விட்டு நீங்குகிறாள்.

மண்டோதரி மிகச் சிறந்த மனைவியாக, பட்டத்து ராணியாக, நல்ல தாயாக, பண்பு நலம் மிக்க மங்கையாகத் திகழ்வதைக் கம்ப சித்திரத்தில் காண்கிறோம். கம்பன் மண்டோதரியை காவிய நாயகியாம் சீதைக்கு ஓரளவு நேராகவே படைத்து வெற்றி கண்டிருக்கிறான். மாண்புமிகு மண்டோதரியின் மறக் கற்பு வாழ்க!

ஸ்ரீ:

# வேளுக்கை

**கண்ணன் :** பார்த்தா! தற்போது நாம் இந்த அஷ்ட புஜத்து எம்பெருமான் ஸன்னிதியிலிருந்து அடுத்த திவ்ய தேசமான **"வேளுக்கை"** எனும் திவ்யதேசத்திற்குச் செல்கின்றோம். இந்த வேளுக்கையானது இந்த இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ரங்கசாமி குளத்திற்குப் பின்புறம் உள்ள 'விளக்கடி கோயில் தெரு' என்னும் சாலையில் கடைசியில் விளக்கொளி தேசிகர் ஸன்னிதிக்குச் சிறிது முன்பாகவே இடது புறம் செல்லும் சாலையில் வைது குறுக்குத் தெருவில் உள்ளது இந்த திவ்ய தேசம்.

**பார்த்தன் :** இந்த திவ்யதேசம் மிகவும் சிதிலமாகி உடனடியாக ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாக நான் ஏற்கனவே கேள்விப் பட்டேனே! உண்மையா கண்ணா?

---

## T. A. பாஷ்யம்

---

**கண்ணன் :** ஆம் பார்த்தா. இதோ இதுதான் 'திருவேளுக்கை' எனும் திவ்ய தேசம். இந்த திவ்ய தேசத்தினை நேரில் ஒருவர் கண்டாலே இதன் நிலையை நன்கு உணரலாம். நமது கோயில்களில் பல மிக ஏழ்மை நிலையில் இருப்பினும் சில திவ்ய தேசங்கள் உடனடியாக ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற வேண்டிய நிலையில் உள்ளன. அவைகளுள் மிகவும் குறிப்பிடத்தக்க 3 திவ்ய

தேசங்கள், பாண்டி நாட்டில் உள்ள தொலைவில்லி மங்கலம், மலை நாட்டிலுள்ள திருச் செங்குன்னூர் திருச்சிற்றாறு, தொண்டை நாட்டில் உள்ள இந்த வேளுக்கை ஆகியவை யாகும். எம்பெருமான் என்று யார் மனத்தினுள் புகுந்து இந்த கைங்கர்யத்தினை நிறைவேற்றத் திருவுள்ளம் பற்றியுள்ளாரோ!

**பார்த்தன் :** இந்த க்ஷேத்திரத்தினை மங்களா சாஸனம் செய்து திவ்ய தேசமாக ஆக்கிய பெருமையினைப் பெற்ற ஆழ்வார்கள் யாவர்?

**கண்ணன் :** பேயாழ்வார் தமது மூன்றும் திருவந்தாதியில் 3 பாசுரங்களினாலும், திருமங்கை ஆழ்வார் தமது பெரிய திருமடலிலும் இந்த திவ்ய தேசத்தினை மங்களா சாஸனம் செய்துள்ளனர்.

**பார்த்தன் :** இந்த திவ்ய தேசம் மிகமிகச் சிறிய ஸன்னிதி அமைப்புடன் கூடியுள்ளது போல் உள்ளதே!

**கண்ணன் :** ஆம் பார்த்தா! இந்த ஸன்னிதி மிகவும் சிறிய ஸன்னிதிதான். உள்ளே பெருமாள் ஸன்னிதி, தாயார் ஸன்னிதி, கருடன் ஸன்னிதி ஆகியவை மட்டுமே உள்ளன. ஆழ்வார் ஆசார்யர்களிலும், நம்மாழ்வார், பேயாழ்வார், கலியன், உடையவர், மணவாளமாமுனிகள் ஆகியோர் மட்டுமே கர்ப்பக் கிருஹத்திற்கு அருகில் எழுந்தருளியுள்ளனர். இனி நாம் இப்படியே ப்ரதக்ஷிணமாய் சென்று முதலில் அமிர்தவல்லித் தாயார் ஸன்னிதியை ஸேவித்து விட்டு பின்பு பெருமாள் ஸன்னிதியை ஸேவிப்போம். தாயார் மூலவர் உத்ஸவர் இருவரும் அதிஸுகுமாரமான திருமேனிகளோடு ஸேவை தருகின்றனர். புராணத்தின்படி தாயார் திருநாமம் வேளுக்கைவல்லி : கனகவல்லி என்றும் காணக் கிடைக்கின்றது. இனி பெருமாள் ஸன்னிதிக்குள் செல்வோம். மூலவர்

சிங்கப்பிரானாக ஆள் அரியாக கம்பீரமான திருமேனியோடு மிடுக்குடன் ஸேவை தருகின்றான். மூலவர் திருமுன்பே உத்ஸவரும் உபய நாச்சிமாரோடும் ஆண்டாளோடும் சதுர் புஜனாய் கம்பீரமான ஆக்ருதியோடு காண்போர் காமுறும் வண்ணம் தனது ஸேவையை அள்ளி வழங்குகின்றான்.

**பார்த்தன் :** பெருமாளுக்கு **ஆளரி** என்றும் திவ்யதேசத்திற்கு வேளுக்கை என்றும் பெயர்கள் கூறினாயே. பெயர்க் காரணம் கூறவில்லையே!

**கண்ணன் :** நரசிங்கம் என்பதன் அழகான தமிழ் மொழி பெயர்ப்புத்தான் **ஆளரி** என்பது **வேள்** என்ற சொல்லுக்கு ஆசை என்று பொருள். பெருமாள் ஆசையுடன் இருக்குமிடம் என்ற பொருள் உள்ள **வேள் இருக்கை** என்ற சொற்கள் மருவி வேளுக்கை என்றாகி விட்டது பெருமாள் ஆசைப்பட்டு வந்த இடம் எப்படி ஆகிவிட்டது பார்த்தாயா?

**பார்த்தன் :** கண்ணா! நமது தௌர்பாக்யத்தை என் சொல்ல.! நம்மில் சிலர் பல பல வசதிகளை நன்கு படைத்தும் அந்த வசதிகளில் ஒரு பங்கினையாவது இந்த மாதிரி மிகமிக ஏழ்மை நிலையிலுள்ள திவ்ய தேச ஸம்ரக்ஷணத்திற்காக செலவிட்டு எம்பெருமானின் பரம கிருபையைப் பெற்று உஜ்ஜீவிக்க எண்ணம் இல்லாமல் உள்ளனரே! இந்த எம்பெருமானையும் இந்த திவ்ய தேசத்தினையும் ஸேவித்த பின்பாவது அவர்களை எம்பெருமான் உடனடியாக ஆட்கொண்டு என்றேனும் ஒருநாள் இந்த மாதிரி திவ்ய தேசங்களும் பொலிவுடன் திகழ எம்பெருமானையே வேண்டுவோம்.

**கண்ணன் :** நன்று நவின்றாய் பார்த்தா! புராணத்தின் படி இந்த எம்பெருமான் திருநாமம் முகுந்த நாயகன் என்றும், விமானம் கனக விமானம் என்றும் எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலமாய் ஸேவை தருவதாகவும் ப்ருகு மஹரிஷிக்கும் ப்ரத்யக்ஷமானதாகவும் அறிகின்றோம். ஆயினும் தற்போது எம்பெருமான் மேற்கே திருமுகமண்டலமாய் வீற்றிருந்த திருக்கோலத்திலேயே ஸேவை தருகின்றான்.